# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,**
**சென்னை அவர்கள் முன்பாக**

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

************

முறையீட்டு மனு எண்.212/2015

ஆணை எண். 19/2016

நாள்: 18/3/2016

திருமதி.மரகதவள்ளி,
திருவொற்றியூர்,
சென்னை. – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
குடியாத்தம் முனிசிபாலிடி,
குடியாத்தம் – எதிர் மனுதாரர்

சென்னை, திருவொற்றியூரைச் சேர்ந்த திருமதி.மரகதவள்ளி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு முறையிட்டுள்ள முறையீட்டு மனு 22.9.2015 அன்று பெறப்பட்டு 212/2015 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது.

## ஆணை:

சென்னை, திருவொற்றியூரைச் சேர்ந்த திருமதி.மரகதவள்ளி என்பவர், குடியாத்தம் நகராட்சியில் உரிமம் எண்.53 உள்ள கடை எண்.16 முறைகேடாக திருமதி உஷா என்பவருக்கு குத்தகை உரிமம் மாற்றி வழங்கப்பட்டுள்ளது குறித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். முறையீட்டுதாரர்

முறையீட்டு மனுவில் தனது முழுமையான முகவரியை அளிக்கவில்லை. எனினும் முறையீட்டு ம ஏற்கப்பட்டு குடியாத்தம் நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது.

2. நகராட்சி ஆணையர் தனது அறிக்கையில், உரிமம் எண்.53 உள்ள கடை எண்.16 திரு.எம்.கே.தனபா என்பவருக்கு மாத வாடகை அடிப்படையில் குத்தகைக்கு விடப்பட்டதாகவும், குத்தகைதாரர் 30.11.2011 காலமாகிவிட்டதால், அவரது வாரிசுதாரரான செல்வி எம்.டி..உஷா என்பவருக்கு மாற்றம் செய்து குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். உரிமம் மாற்றம் செய்ததில் உரிய நடைமுறைகள் மற்றும் அரசு ஆணை வழிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள். மனுதாரர்கள் தனது முழுமையான முகவரியை அளிக்காததால் அவரிடம் விசாரணை மேற்கொள்ள இயலவில்லை ஏனவே குடியாத்தம் நகராட்சி ஆணையரின் அறிக்கையை ஏற்று இந்நேர்வில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையை இத்துடன் முடித்துக்கொள்ள இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ

//உண்மை நகல் / உத்தரவின்படி / அனுப்பப்படுகிறது//

12.3.1
கண்காணிப்பாள

பெறுநர்,
ஆணையாளர்,
குடியாத்தம் முனிசிபாலிடி, நகராட்சி
குடியாத்தம்